2003 மே 5]

(ஆ) அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தல்லவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்கள்...(குறுக்கீடு)

திரு. தி. வேல் முருகன்: தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பயிற்சி மருத்துவர்களுடைய போராட்டம் நீடித்துக் கொண்டிருக்கிறது. மருத்துவமனையிலே நோயாளிகள் எல்லாம் பாதிக்கப்பட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நாளை எடுத்துக் கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை எடுத்துக்கொள்ளலாம்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தூத்துக்குடி மாவட்டம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இரண்டு முறை சொல்லிவிட்டீர்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதையெல்லாம் எப்போது எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்கிறேன், அறைக்கு வாருங்கள் பேசலாம்.

(இ) காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பேச்சுவார்த்தைக்கு அழைப்பு

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்கள் காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே தமிழக அரசு பேசினால், நான் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கை வருகிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.